வாசிக்க : சங்கீதம் 22:1-19; மத்தேயு 27:45-49

***"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத் 27:46)***

இதுவே சிலுவையிலிருந்து வந்த மையக்குரல். ஒருபோதும் நாம் கைவிடப்படாதபடி கிறிஸ்து நொடிப்பொழுது கைவிடப்பட்டார்!

பாவத்தைக் குறித்த அறிவு திருச்சட்டத்தினால் வந்தது. பாவம் நம்மைக் கடவுளை விட்டுப் பிரித்தது. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றன" (ஏசா 59:2). சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவின்மீது நமது பாவங்கள் அனைத்தும் சுமத்தப்பட்டபோது, தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணராகிய இறைவன் தமது முகத்தைக் குமாரனுக்கும் மறைத்துவிட்டார். பாவமறியாதவர் நமக்காய்ப் பாவமானார்.

கிறிஸ்துவின் உடல் நொறுக்கப்பட்டபோது, பிரித்து நின்ற சுவர் நொறுங்கி விழுந்தது. நாம் ஒரு நாள் "புறவினத்தராய் ... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலரின் சமுதாயத்திற்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அன்னியர்களும், நம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகில் கடவு ளற்றவர்களுமாய் இருந்தோம்" (எபே 2:11,12). இப்பொழுதோ கிறிஸ்துவின் இரத்தத் தால் கடவுளுக்கு அருகில் வந்துவிட்டோம். இப்பொழுது "அன்னியரும் பரதேசி களுமாயிராமல், பரிசுத்தவான்களோடு உடன் குடிமக்களும், கடவுளுடைய குடும்பத் தாருமாய்" இருக்கிறோம் (வச 19).

இயேசு உயிர்விட்டபோது தேவாலயத்திலுள்ள தொங்குதிரை கிழிந்தது, பூமி அதிர்ந்தது, கல்லறைகள் திறந்தன. இனி எதுவுமே தடுக்க முடியாது! மகா புனிதத் தலத்திற்கு வழி திறக்கப்பட்டாயிற்று. இப்பொழுது தைரியமாய்க் கிருபாசனம் செல்லலாம். எல்லாம் சிலுவையினாலேயே!

எல்லா வேளைகளிலும் ஒன்றுபோல் தேவப்பிரசன்னத்தை நாம் "உணர" முடியாதுதான். ஆனால் மாறிக்கொண்டேயிருக்கும் நமது உணர்ச்சிகளை நாம் சார்ந்திருக்கவேண்டியதில்லை. "இம்மானுவேல்!"—இதுதான் உண்மை— இறைவன் நம்மோடிருக்கிறார்! "கடவுள் நம்மோடிருப்பதே எல்லாவற்றிலும் பெரிது" என்றார் ஜான் வெஸ்லி (1703-1791). என்னே உறவு!

யோவான் எழுதிய முதல் நிருபத்தை இறையுறவின் நிருபம் எனலாம். அதை அவர் இவ்விதம் துவங்குகிறார்: "எங்கள் நெருக்கவுறவு பிதாவோடும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (வச 3). நாம் இவ்வுலகில் தனியாக இல்லை; கடவுள் நம்மோடு இருக்கிறார்; கிறிஸ்து நமக்காக இருக்கிறார்; இதைவிடப் பேராசீர்வாதம் உண்டோ? இகத்தில் இறைவன் "நம்முடன்" இருக்கிறார்; பரத்தில் நாம் "இறைவனுடன்" இருப்போம்!

கடவுளோடு ஐக்கியங்கொள்ளுதலே பரலோகத்தின் துவக்கம் என்றார் ஒருவர். விண்ணை மண்ணில் அனுபவிக்க வழிவகுத்த சிலுவைக்காய் அல்லேலூயா! சிலுவையின் செய்தி நற்செய்தியே!

*கிறிஸ்து இருந்தால் கிடங்கும் சிங்காசனமாகும்;*
*கிறிஸ்து இல்லையேல் சிங்காசனமும் நரகமாகும்!*
*— மார்ட்டின் லூத்தர், 1483-1546*